**<u>நவராத்திரி விழா – 20.10.2023</u>**

புஷ்பலதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் நவராத்திரி விழா கொண்டாட்டத்தை முன்னிட்டுச் சிறப்பு வழிபாட்டுக் கூட்டம் நடைபெற்றது. கே.ஜி. முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான மாணவர்கள் கடவுளர்களின் வேடம் பூண்டு அணிவகுத்து வந்து மேடையை அலங்கரித்தனர். கொழுவின் அமைப்பு, பொம்மைகள் வைக்கும் முறை, அதற்கான காரங்ணங்களை விளக்கும் உரை மாணவர்களால் மழலை மொழியில் நிகழ்த்தப்பட்டது.

துர்கா தேவி மகிஷாசுரனை வீழ்த்திய காட்சியைத் தத்ரூபமாகக் காட்டும் நாடகம், 9 மற்றும் 10ஆம் வகுப்பு மாணவர்களால் நிகழ்த்தப்பட்டது. பாத்திரத்தோடு ஒன்றிப்போன மாணவர்களின் நடிப்புக் கண்டோர் அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

நவராத்திரி குழுப்பாடலும், பாரம்பரிய நடனமும் 6 முதல் 8ஆம் வகுப்பு மாணவர்களால் நிகழ்த்தப்பட்டது. காண்போர் கண்ணுக்கும், செவிக்கும் மட்டுமல்லாது மனதிற்கும் இன்பத்தை அள்ளித்தந்தது இந்நிகழ்வு